**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேந்தமங்கலம்.</u>**

**முன்னிலை: திருமதி.பி.கே.தமயந்தி,எம்,ஏ.,பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**

**2024 ம் ஆண்டு ஜனவரி மாதம் 05 நாள் வெள்ளிக்கிழமை**

<u>இ.ம.எண். 10/2023 in அ.வ.எண். 43/2020</u>

1. ரத்தினம்
2. துளசிமணி
3. பாலாமணி
4. வசந்தா . . . **மனுதாரர்கள்/6, 10, 11, 12 பிரதிவாதிகள்**

**//எதிராக//**

1. சடையன் (இறந்தார்)
2. சகுந்தலா
3. பன்னீர்செல்வம்
4. சந்திரன்
5. தேவராசன்
6. நித்யா
7. சத்யா
8. தங்கேஸ்வரன்
9. செல்வி
10. லதா . . . **எதிர்மனுதாரர்கள்/வாதிகள்**

இம்மனுவானது என்முன்பு 28.11.2023 ம் தேதியில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/6, 10, 11, 12 பிரதிவாதிகள்தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.Ra.அய்யாவு, அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 10 எதிர்மனுதாரர்கள்/வாதிகள்தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.தமிழ்ச்செல்வன், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்கள்/6, 10, 11, 12 பிரதிவாதிகள்தரப்பில், பிரமாணப்பத்திரத்தில் கண்டுள்ள காரணங்களுக்காக தீர்ப்புக்காக வாய்தா வைக்கப்பட்டுள்ள வழக்கை Reopen செய்ய அனுமதியளித்து உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. <u>மனுதாரர்கள்/6, 10, 11, 12 பிரதிவாதிகள்தரப்பு பிரமாணப்பத்திரிக்கையின் சுருக்கம்:-</u>**

மனுதாரர் அசல் தாவாவில் 10ம் பிரதிவாதி. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் விளம்புகை மற்றும் பாகப்பிரிவினை மற்றும் தனிச்சுவாதீனம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி வழக்கு 17.12.2014 தேதியில் மனுதாரர்களின் வருகைக்காக வாய்தா வைக்கப்பட்டிருந்ததில் மனுதாரருக்கு கடுமையான வயிற்றுவலி ஏற்பட்டதால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்றும், அதனால் மனுதாரருக்கு எதிராக தோன்றாதரப்பினராகி உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், மேலும் கடந்த 2014 முதல் 2023 வரை மனுதாரர்கள் வயதானவர்கள் என்பதால் இந்நீதிமன்றத்தில் நேரிலோ, வழக்கறிஞர் மூலமோ ஆஜராக இயலவில்லை என்றும், அசல் வழக்கில் 25.08.2023 தேதியில் தீர்ப்புரைக்காக வாய்தா வைக்கப்பட்டிருந்தது என்றும் மனுதாரர்களின் வழக்கறிஞர் மேற்படி விவரத்தை தெரிவித்தவுடன் இம்மனு தாக்கல் செய்ய அறிவுறுத்தியதாகவும், மனுதாரர்கள் தரப்பில் வழக்கை எதிர்வாதம் செய்ய Reopen செய்யவேண்டும் என்றும் மனுதாரர்கள் தரப்பில் ஏற்பட்டுள்ள தவறு நல்லெண்ணத்தின் பேரில் ஏற்பட்டது என்றும் இம்மனு அனுமதிக்கக்கப்படாவிட்டால் மனுதாருக்கு கஷ்ட

நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்றும் மனுதாரர்கள் தரப்பில் இம்மனு அனுமதியளித்து உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **3 ம் எதிர்மனுதாரர்/3 ம் பிரதிவாதிதரப்பு எதிர்மனுஉரையின் சுருக்கம்:– (2, 4 முதல் 10 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தமதாக பாவித்துக்கொண்டுள்ளார்கள்)**

எதிர்மனுதாரர்கள்/வாதிகள்தரப்பில் எதிர்மனுஉரையில், மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்களாகி 9 வருடங்கள் கழித்து தற்போது மீண்டும் மேற்படி வழக்கை நடத்த முன்வருவதாகவும், மேற்படி தேதியில் மனுதாரருக்கு வயிற்றுவலி ஏற்பட்டதாகவும், வயது முதிர்வு காரணமாகவும் தனிப்பட்ட அசௌகரியம் காரணமாகவும் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்றும் கூறியுள்ள சங்கதிகள் ஏற்றுக்கொள்ளக்கூடியவையல்ல. மனுதாரருக்கு வயிற்றுவலி எனக்குறிப்பிட்டுள்ளது பொய்யாகும். 2014 ம் ஆண்டு வயிற்றுவலி என்று கூறிவிட்டு 9 வருடங்கள் கழித்து தற்போது மேற்படி காரணத்தை கூறி மனு தாக்கல் செய்திருப்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. வாதிகள்தரப்பில் விசாரணை முடிக்கப்பட்டு பிரதிவாதிகள்தரப்பு விசாரணை முடிக்கப்பட்டு வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் மனுதாரர் பொய்யான சங்கதிகள் கூறி 9 வருடங்கள் கழித்து மேற்படி வழக்கில் தோன்றாதரப்பினர்களாக உள்ளதை ரத்து செய்ய Reopen மனு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி நிலைக்கக்கூடியதல்ல. வழக்கு நடவடிக்கைகளை இழுத்தடிக்க வேண்டும் என்ற கெட்டஎண்ணத்தில் மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல்

செய்துள்ளனர். ஆகவே மனுதாரர்களின் மனு தள்ளுபடியாக வேண்டும் என எதிர்மனுஉரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

4. இம்மனுவில் இந்நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டியது என்னவென்றால் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. வழக்காவணங்களை ஆராய்ந்து பார்க்கும்போது, அசல் வழக்கானது கடந்த 27.04.2012 தேதியில் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள்/ வாதிகள்தரப்பில் தாவாசொத்துக்களை குறித்து 3 மற்றும் 6 பிரதிவாதிகள் கடந்த 03.02.2012 ம் தேதியில் ஏற்படுத்திக்கொண்ட 02.03.2000 ம் தேதியில் கிரையப்பத்திரத்தின் ரத்துபத்திரம் சட்டப்படி செல்லக்கூடியதல்ல என விளம்புகை செய்தும், தாவா 1 முதல் 3 சொத்துக்கள் குறித்து கடந்த 03.03.2012 ம் தேதியில் எருமப்பட்டி சார்பதிவக ஆவணஎண்.581/2011 படி வாதியின் மகன் சந்தரன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் ரத்துபத்திரம் செல்லக்கூடியதல்ல என விளம்புகை செய்தும், தாவா 1 முதல் 3 சொத்துக்கள் குறித்து கடந்த 03.03.2012 ம் தேதியில் எருமப்பட்டி சார்பதிவக ஆவணஎண்.581/2011 படி வாதியின் மகன் பன்னீர்செல்வம் என்பவருக்கு வாதி எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் ரத்துபத்திரம் சட்டப்படி செல்லக்வடியதல்ல என விளம்புகை செய்தும், தாவா சொத்துக்களை 5 சமபாகங்களாக பிரிவினை செய்து அதில்

3 பாகத்தினை வாதி மற்றும் 1ம் பிரதிவாதியால் தனித்தனியாக வீடுகட்டி அனுபவித்து வரும் பாகத்தினையே மேற்படியார்களுக்கு நணுரவைலபடி ஒதுக்கிதர செய்து பாகப்பிரிவினைக்கு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்தும், அதனை அனுசரித்து இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது வழக்காவணங்களின் மூலம் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

**6.** மேற்படி அசல் வழக்கில் கடந்த 25.08.2023 தேதியில் தீர்ப்புரைக்காக வாய்தா வைக்கப்பட்ட பின்பு மனுதாரர்கள்/6,10,11,12 பிரதிவாதிகள் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் தனிச்சுவாதீனம் மற்றும் விளம்புகை பரிகாரங்களுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு என்பதால் மனுதாரர்கள்/6,10,11,12 பிரதிவாதிகள் Contest செய்ய வாய்ப்பு வழங்க வேண்டும் என்று தீர்ப்புரைக்காக வாய்தா வைக்கப்பட்டுள்ள அசல் வழக்கை Reopen செய்ய கோரியுள்ளது இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும் வகையில் உள்ளது. மேலும் இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதாலும், தரப்பினர்களுக்கு அவர்களது வழக்கை எடுத்துரைக்க உரிய வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும், இயற்கை நீதிக்கொள்கையின் அடிப்படையிலும், மனுதாரர்களின் மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** மனுதாரர்களின் மனுவை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. செலவுத்தொகை இல்லை.

என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, இன்று திறந்த

நீதிமன்றத்தில் 2024ம் வருடம் ஜனவரி மாதம் 05ம் நாள் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

P K DHAMAYANTHI

Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2024.01.05 19:37:01 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**

1. **மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:—**
   **இல்லை.**

2. **எதிர்மனுதாரர்கள்/வாதிகள்தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :—**
   **இல்லை.**

P K DHAMAYANTHI

Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2024.01.05 19:37:07 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**